**செ.வெ. எண்:235** **நாள்: 26.04.2017**

# <u>செய்தி வெளியீடு</u>

## <u>மாண்புமிகு திரு. நீதியரசர் எஸ். ராஜேஸ்வரன் விசாரணை ஆணையம் அளிக்கும் தகவல்</u>

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் தமிழ்நாட்டின் ஏனைய பகுதிகளில் ஜல்லிக்கட்டு நடத்துவதற்காக நடைபெற்ற போராட்டத்தில், 23.01.2017அன்று சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டதற்கான காரணங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து விசாரணை செய்வதற்காக, ஒய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி நீதியரசர் திரு. எஸ்.ராஜேஸ்வரன் அவர்களை கொண்டு அமைக்கப்பட்ட விசாரணை ஆணையம் வெளியிட்ட அறிவிக்கையில், இது தொடர்பாக தனிப்பட்ட முறையில் அறிந்தவர்களும், நேரடித் தொடர்பு உடையவர்களும், அவர்களுக்குத் தெரிந்த தகவலை சத்தியப் பிரமாண உறுதிமொழிப் பத்திரவடிவில் (1+2 நகல்களுடன்) விசாரணை ஆணையத்திடம் 30.4.2017க்குள் நேரிடையாகவோ அல்லது தபால் மூலமாகவோ அளிக்கலாம் என அறிவித்திருந்தது.

2. இது தொடர்பாக, கீழ்கண்ட சில தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன:-

(i) விசாரணை ஆணையம் தனது அறிக்கையை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கும் வரை, அரசிடம் காலநீட்டிப்புப் பெற்று, தொடர்ந்து நடைபெறும்.

(ii) விசாரணை ஆணையத்தில் சத்தியப்பிரமாண உறுதிமொழிப் பத்திரம் தாக்கல் செய்தவர்களுக்கும், விசாரணை ஆணையம் தேவையெனக் கருதும் பிற தொடர்புடைய நபர்களுக்கும் அழைப்பாணை அனுப்பி உரிய விசாரணை மேற்கொள்ளப்படும்.

(iii) 1952ஆம் ஆண்டு விசாரணை ஆணையங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) கீழ் அமைக்கப்பட்ட விசாரணை ஆணையம் ஒரு நீதிமன்றத்திற்கு உரிய அதிகாரத்துடன் செயல்படும். அதனால் சத்திய பிரமாண உறுதிமொழிப் பத்திரம் (sworn affidavit) வாயிலாக மட்டுமே பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை முன்வைக்க வேண்டும். சத்திய பிரமாண உறுதிமொழிப் பத்திரம் (1+2 நகல்கள்) ஒரு வழக்கறிஞரின் சான்றொப்பத்துடன் தாக்கல் செய்தால் மட்டுமே போதுமானது. அதனை முத்திரைத்தாளிலோ அல்லது நோட்டரி பப்ளிக் கையொப்பம் பெற்றோ தாக்கல் செய்ய வேண்டியதில்லை.

(iv) ஆணையத்தின் விசாரணை சென்னையில் மட்டுமல்லாமல் மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் தேவைப்படும் பட்சத்தில் தமிழகத்தின் இதரப் பகுதிகளிலும் நடத்தப்படும். தொடர்புடைய நபர்களுக்கு அழைப்பாணை (Summons) அனுப்பி அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் விசாரணை மேற்கொள்ளப்படும்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**